THE HINDU 12 JAN 2025

# Pongal gift hamper distribution begins after nod from EC




While distribution began in other parts of Erode, it hadn't yet begun in Erode (East) where polling is scheduled. M. GOVARTHAN

**The Hindu Bureau**
ERODE

The distribution of Pongal gift hampers to cardholders in the Erode (East) Assembly constituency, where the Model Code of Conduct is in force, began on Saturday, with permission from the Election Commission.

The State government had announced the distribution of one kg of raw rice, one kg sugar, and a whole sugarcane, at ration shops starting January 9. While the distribution of gift hampers began at ration shops across the district, it did not commence at shops located within the constituency, where polling is scheduled for February 5.

Officials said that permission has been secured, and that all cardholders will receive the hampers within the next three days.

Scanned with OKEN Scanner

இந்து தமிழ் 12 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் ஆவணமில்லாத ரூ.3.30 லட்சம் பறிமுதல்

■ ஈரோடு

ஈரோடு கிழக்கு தொகுதியில் உரிய ஆவணங்களின்றி எடுத்து வரப்பட்ட ரூ.3.30 லட்சத்தைத் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் பறிமுதல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி, அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்குப் பணம் பரிசுப் பொருட்கள் வழங்குவதைத் தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரோடு கருங்கல்பாளையம் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் தேர்தல் பறக்கும் படை, கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, அவ்வழியாக வந்த காரில் சங்ககிரியைச் சேர்ந்த ஒப்பந்ததாரர் சரவணன் என்பவர் ஆவணமின்றி எடுத்து வந்த ரூ.1 லட்சம், இதேபோல ஈரோடு அரசு மருத்துவமனை ரவுண்டானா பகுதியில் காரில் எடுத்து வந்த ரூ.1.80 லட்சம் மற்றும் ஈரோடு மரப்பாளையம் பகுதியில் பெண் ஒருவர் எடுத்து வந்த ரூ.50,860-ஐ பறிமுதல் செய்து, தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷிடம் ஒப்படைத்தனர். பின்னர் அப்பணம் அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப் பட்டது. பறிமுதல் செய்யப் பட்ட பணத்துக்கான உரிய ஆவணங்களை சமர்ப்பித்து, பெற்றுக் கொள்ள உரியவர்களுக்கு அறிவுறுத்தப் பட்டது.

Rs.3.30 Lakhs without proper documents have been seized so far by the flying squad in the Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

**தினத்தந்தி** 12 JAN 2025

100 சதவித வாக்குப்பதிவினை வலியுறுத்தி

## வாக்காளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம்

ஈரோடு, ஜன.12-

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந் தேதி இடைத்தேர்தல் நடக்கிறது. இந்த தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவினை வலியுறுத்தி ஈரோடு மாநகராட்சி சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி நேற்று ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் 100 சதவீதம் வர்க்குப்பதிவு விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் நடந்தது.

இதில் ஈரோடு மாநகராட்சி ஆணையாளரும், ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியுமான டாக்டர் மனிஷ் கையெழுத்திட்டு நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். மாநகராட்சி நல அதிகாரி டாக்டர் கார்த்திக்கேயன் மற்றும் அதிகாரிகள் கையெழுத்திட்டனர். தூய்மை பணியாளர்கள், மாநகராட்சி பணியாளர்கள் மற்றும் பொதுமக்களும் 100 சதவீதம் வாக்குப்பதிவினை வலியுறுத்தி கையெழுத்திட்டனர்.

SVEEP Activity : Voter Awareness Signature Movement for emphasising 100% polling.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 12 JAN 2025

ஈரோடு கிழக்கு தொகுதியில்

# பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகம்

ஈரோடு, ஜன.12-

ஈரோடு கிழக்கு தொகுதியில் பொங்கல் பரிசு தொகுப்பு வினியோகிக்கப்பட்டு வருகிறது.



ஈரோடு ராஜாக்காட்டில் பொங்கல் பரிசு தொகுப்பு பொருட்களை வாங்கி சென்றவர்களை படத்தில் காணலாம்.

## பொங்கல் பரிசு தொகுப்பு

தமிழகத்தில் ரேஷன் கார்டுதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு ஆகியவை ரேஷன் கடைகளில் வழங்கப்படுகிறது. ஈரோடு கிழக்கு தொகுதியில் பொங்கல் பரிசு தொகுப்புக்கு டோக்கன் வழங்கிய நிலையில், இடைத்தேர்தல் அறிவிப்பால், பரிசு தொகுப்பு வழங்காமல் நிறுத்தி வைக்கப்பட்டது.

மேலும் இதுகுறித்து ரேஷன் கடைகளில், 'ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் அறிவிக்கப்பட்டதால், தற்போது பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க இயலவில்லை' என்று அறிவிப்பு பலகை வைக்கப்பட்டது. இந்தநிலையில் மாவட்ட நிர்வாகம், மாநில அரசு மூலம் தேர்தல் ஆணையத்தில் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

## அனுமதி ஆணை

இதுகுறித்து ஈரோடு மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளதால், இந்த தொகுதிக்குட்பட்ட ரேஷன் கார்டுதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு, இலவச வேட்டி, சேலை ஆகியவை வழங்க, இந்திய தேர்தல் ஆணையத்திடம் அனுமதி ஆணை, நிபந்தனைகளுடன் பெறப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால், பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும்போது, அரசியல் கட்சியினர் தலையீடு இருக்கக்கூடாது. இந்த திட்டம் தொடர்பாக, அரசியல் கட்சியினரின் புகைப்படம் இருக்கக்கூடாது. தேர்தல் நடத்தையின் அனைத்து விதிமுறைகளும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். அனைத்து ரேஷன் கார்டுதாரர்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பான ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு, இலவச வேட்டி, சேலை ஆகியவை வழங்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பின்படி நேற்று காலை முதல் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட அனைத்து ரேஷன் கடைகளிலும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணி நடந்து வருகிறது.

Distribution of Pongal gifts started in Erode East Assembly Constituency

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 12 JAN 2025

### உரிய ஆவணம் இல்லாததால்

# பெண்ணிடம் ரூ.50,860 பறிமுதல்

ஈரோடு, ஜன.12-

உரிய ஆவணம் இல்லாததால் பெண்ணிடம் ரூ.50 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டது.

## தீவிர வாகன சோதனை

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம், பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி நேற்று முன்தினம் இரவில் ஈரோடு மரப்பாலம் பகுதியில், தேர்தல் கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக ஸ்கூட்டரில் வந்த ஒரு பெண்ணை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர்.

## பெண்ணிடம் பணம் பறிமுதல்

இந்த சோதனையின்போது, அந்த பெண்ணிடம் ரூ.50 ஆயிரத்து 860 இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து போலீசார் நடத்திய விசாரணையில் அந்த பெண், ஈரோடு கள்ளுக்கடைமேடு பகுதியை சேர்ந்த மாணிக்கம் என்பவருடைய மனைவி நிர்மலா என்பதும், அவர் கொண்டு வந்த பணத்துக்கு உரிய ஆவணம் இல்லாததும் தெரியவந்தது.

இதனால் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் அந்த பணத்தை பறிமுதல் செய்து, ஈரோடு மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையிலுள்ள அலுவலர்களிடம் ஒப்படைத்தனர். பின்னர் அந்த பணம் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரியும், மாநகராட்சி ஆணையாளருமான மனிஷ் உத்தரவின் பேரில் அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது. ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.3 லட்சத்து 30 ஆயிரத்து 860 பறிமுதல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

The amount Rs.50860/- without proper documents seized from a lady.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி

12 JAN 2025

ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்:

# எந்தெந்த ஆவணங்களை காண்பித்து ஓட்டளிக்கலாம்

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரி விளக்கம்

சென்னை, ஜன.12-

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாய்க் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

ஈரோடு (கிழக்கு) சட்டமன்றத் தொகுதிக்கான இடைத்தேர்தலில் அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும். அதனை அளிக்க இயலாத வாக்காளர்கள், சில மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி ஆதார் அட்டை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அட்டை, புகைப்படத்துடன் கூடிய வங்கி-அஞ்சலக கணக்குப் புத்தகங்கள், தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை, ஓட்டுனர் உரிமம், நிரந்தர கணக்கு எண் அட்டை (பான்கார்டு), தேசிய மக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வாங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை, இந்திய கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்), புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம், மத்திய-மாநில அரசு-பொதுத்துறை நிறுவனங்களால் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், பாராளுமன்ற-சட்டமன்ற-சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை, இந்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்படும் தனித்துவமான இயலாமைக்கான அடையாள அட்டை ஆகியவற்றை காண்பித்து வாக்களிக்கலாம்.

மேலும், மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கினை செலுத்திவிட முடியாது. அவருடைய பெயர் வாக்குச்சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையைச் செலுத்த தகுதியுடையவர் ஆவார்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Erode East Assembly Constituency By-election
Tamilnadu Chief Election Commissioner explains
The list of documents to be shown at the time of casting votes.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 12 JAN 2025

### இடைத்தேர்தலில் போட்டியிடும்

# சுயேச்சை வேட்பாளர்களுக்கு 135 சின்னங்கள் ஒதுக்கீடு

ஈரோடு, ஜன.12-


ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி நடக்கிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் தேர்தல் மன்னன் பத்மராஜன் உள்பட 3 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். வேட்புமனு தாக்கல் செய்துள்ள 3 பேரும் ஈரோடு அல்லாத வேறு மாவட்டங்களை சேர்ந்தவர்கள். ஈரோடு மாவட்டம் அல்லது ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட யாரும் இதுவரை வேட்புமனு தாக்கல் செய்ய வில்லை.

இடைத்தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினருக்கு கட்சியின் சின்னம் ஒதுக்கீடு செய்யப் படும். சுயேச்சையாக போட்டியிடுபவர்களுக்காக தேர்தல் ஆணையம் 135 சின்னங்கள் ஒதுக்கி உள்ளது. சுயேச்சைவேட் பாளர்கள் அந்த பட்டியலை பார்த்து விரும்பும் 3 சின்னங் களை தேர்வுசெய்து வேட்புமனுவில் குறிப்பிட வேண்டும். இதில் ஏதாவது ஒரு சின்னம் ஒதுக்கப்படும். ஒன்றுக்கு மேற் பட்டவர்கள் ஒரே சின்னம் கேட்டு இருந்தால் குலுக்கல் முறையில் சின்னம் ஒதுக்கீடு செய்யப்படும்.

135 symbols allotted for the independent candidates for the By-election.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 12 JAN 2025



ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் மண்டல அலுவலர்களுக்கான கூட்டம் நடந்த போது எடுத்த படம்.

# வாக்குச்சாவடி மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி கூட்டம்

## தேர்தல் நடத்தும் அதிகாரி மனிஷ் தலைமையில் நடந்தது

ஈரோடு, ஜன.12-

வாக்குச்சாவடி மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி கூட்டம், தேர்தல் நடத்தும் அதிகாரி மனிஷ் தலைமையில் நடந்தது.

### மண்டல அலுவலர்கள்

ஈரோடு கிழக்கு தொகுதியில் 53 இடங்களில் மொத்தம் 237 வாக்குச்சாவடிகள் உள்ளன. இதில் 5 முதல் 8 வாக்குச்சாவடிகளுக்கு தலா ஒரு மண்டல அலுவலர், ஒரு உதவி மண்டல அலுவலர் நியமிக்கப்படுவர். இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிகள் தேர்தல் ஆணைய விதிப்படி அமைக்கப்படுவதை உறுதி செய்தல், மின்னணு வாக்குப்பதிவு எந்திரம், கட்டுப்பாட்டு கருவி; வி.வி.பேட் ஆகியவ்வ முறையாக செல்வதை உறுதி செய்தல் போன்ற பணிகளை செய்வார்கள்.

மேலும் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்கு தேவையான பயன்பாட்டு பொருட்கள், பணிசெய்யும் தேர்தல் அலுவலர்கள் எண்ணிக்கையை உறுதிசெய்து, தேவை அடிப்படையில் கூடுதல் நபர் நியமனம், விடுப்பு, உடல் நலக்குறைவால் மாற்றம் செய்ய வேண்டியவரை விடுவித்து, மற்றொருவரை பணி செய்ய அனுமதித்தல் போன்ற பணிகளையும் இவர்கள் செய்ய வேண்டும்.

### பயிற்சி கூட்டம்


வாக்குப்பதிவு நாளில் எந்திரங்களை வாக்குச்சாவடிக்கு கொண்டு செல்லுதல் மற்றும் எந்திரங்களில் பழுது, பிற பிரச்சினைகள் ஏற்பட்டால் அதை சரிசெய்து மாற்றி அமைத்தல் பணியும், வாக்குப்பதிவு முடிந்ததும், வாக்கு எண்ணும் மையத்துக்கு கொண்டு சேர்ப்பது வரை, இவர்களுடைய பொறுப்பாகும்.

இந்த நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி மண்டல அலுவலர் மற்றும் உதவி அலுவலர்களுக்கான பயிற்சி கூட்டம் ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் நேற்று நடந்தது. இந்த கூட்டத்துக்கு தேர்தல் நடத்தும் அதிகாரியும், ஈரோடு மாநகராட்சி ஆணையாளருமான மனிஷ் தலைமை தாங்கினார். தேர்தல் பிரிவு அலுவலர்கள் கலந்து கொண்டு, மண்டல அலுவலர்கள் மற்றும் உதவி ம்ண்டல அலுவலர்களுக்கு, தேர்தல் விவரங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கி, பயிற்சி அளித்தனர்.

The By-election Returning Officer conducted Training class for the Zonal Officers.

Scanned with OKEN Scanner

தினத்தந்தி 12 JAN 2025



மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பாதுகாப்பு அறையில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா ஆய்வு செய்துவிட்டு வெளியே வந்த போது எடுத்த படம்.

## இடைத்தேர்தலுக்கு தயாராகும் மின்னணு எந்திரங்கள்:

# மாதிரி வாக்குப்பதிவு நடந்தது

ஈரோடு, ஜன.12-

ஈரோடு இடைத்தேர்தலுக்கு தயாராகும் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்களில் மாதிரி வாக்குப்பதிவு நடந்தது.

### மாதிரி வாக்குப்பதிவு

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 237 வாக்குச்சாவடி மையங்களில் அடுத்த மாதம் (பிப்ரவரி) 5-ந்தேதி நடைபெற உள்ளது. இந்த வாக்குப்பதிவுக்கு 480 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பயன்படுத்தப்பட உள்ளன. இதை முன்னிட்டு, வாக்குப்பதிவு எந்திரங்கள் முதல் நிலை சரிபார்க்கும் பணி பெங்களூரு பெல் நிறுவனத்தின் மூலம் கடந்த 6-ந்தேதி முதல் ஈரோடு மாவட்ட மின்னணு வாக்குப்பதிவு எந்திர கிடங்கில் நடைபெற்று வந்தது. இதில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் முதல் கட்ட சரிபார்ப்பு பணி முடிவுற்ற பின்னர், இந்திய தேர்தல் ஆணையம் 5 சதவீதம் மாதிரி வாக்குப்பதிவு நடத்திட உத்தரவிட்டுள்ளது.

### கலெக்டர் ஆய்வு

அதன்படி, முதல் கட்ட சரிபார்ப்பு பணி நேற்று முடிவடைந்ததை தொடர்ந்து மின்னணு வாக்குப்பதிவு எந்திரத்தில் மாதிரி வாக்குப்பதிவு நடந்தது. இந்த பணியை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியினர் முன்னிலையில், ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரியும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் மாதிரி வாக்குப்பதிவு முடிவடைந்தவுடன், 19 மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் பயிற்சி நடத்துவதற்காக ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையாளருமான மனிஷிடம் ஒப்படைக்கப்பட உள்ளன. இந்த ஆய்வின் போது, ஈரோடு ஆர்.டி.ஓ. ரவி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முஹம்மது குதுரத்துல்லா, தேர்தல் பிரிவு தாசில்தார் சிவசங்கர் உள்பட அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடன் இருந்தனர்.

Mock poll conducted with the Electronic Voting machines to be used in the By-election.

Scanned with OKEN Scanner

தினமலர் 12 JAN 2025

## தேர்தல் கமிஷன் அனுமதி

# ஈரோடு கிழக்கு தொகுதியில் பொங்கல் தொகுப்பு விநியோகம்


ஈரோடு, ஜன. 12-

தேர்தல் கமிஷன் அனுமதி வழங்கியதால் ஈரோடு கிழக்கு தொகுதியில் ரேஷன் கடைகளில் பொதுமக்களுக்கு பொங்கல் தொகுப்பு விநியோகம் நேற்று முதல் துவங்கியது.

தமிழக அரசின் பொங்கல் தொகுப்பு கடந்த 9ம் தேதி முதல் தமிழகம் முழுவதும் உள்ள ரேஷன் கடைகளில் கார்டுதாரர்களுக்கு வழங்கப் பட்டு வருகிறது. இதனைத் தொடர்ந்து ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் காரணமாக தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால் பொங்கல் தொகுப்பு மறு அறிவிப்பு வரும் வரைவழங்கப்படாமல் இருந்து வந்தது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் 100 ரேஷன் கடைகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு வழங்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. இது தொடர்பாக ரேஷன் கடைகளில் நோட்டீஸ் ஒட்டப்பட்டு இருந்தது. இதற்கிடையே மாவட்ட தேர்தல் நடத்தும் அதிகாரி ராஜ கோபால் சுன்கரா பொங்கல் தொகுப்பு வழங்க அனுமதி கேட்டு இந்திய தலைமை தேர்தல் கமிஷனுக்கு பரிந்துரை செய் திருந்தார். இதையடுத்து தேர்தல் கமிஷன், தேர்தல் நடைமுறை விதிகள் உள்ள கிழக்கு சட்டமன்ற தொகுதியில் பொங்கல் பரிசு தொகை வழங்கும்போது அரசியல் கட்சியினர் ஈடுபாடு இருத்தல் கூடாது, இத்திட்டம் தொடர்பாக அரசியல் கட்சியினர் புகைப்படம் எதுவும் இல்லாமல் விளம்பரம் இருக்க வேண்டும்.

தேர்தல் நடத்தை தொடர்பான அனைத்து விதிமுறைகளும் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என மூன்று நிபந்தனைகளை பின்பற்றி ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கலாம் என அறிவித்தது. இதனை அடுத்து பயனாளிகளுக்கு தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு கரும்பு மற்றும் வேட்டி - சேலை ஆகியவற்றை வழங்கும் பணி நேற்று தொடங்கியது.



ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட ரேஷன் கடைகளில் பயனாளிகளுக்கு பொங்கல் தொகுப்பு வழங்கப்பட்டது.

தகவல் அறிந்ததும் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட மக்கள் அந்தந்த ரேஷன் கடைகளில் பொங்கல் தொகுப்புகளை ஆர்வத்துடன் வாங்கி சென்றனர். வரும் 13ம் தேதிக்குள் ஈரோடு கிழக்கு தொகுதியில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் தொகுப்பு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

Election Commission granted permission to distribute Pongal gifts in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினமலர்                12 JAN 2025

# ஈரோட்டில் ரூ.3.30 லட்சம் பறிமுதல்
## தேர்தல் பறக்கும் படை அதிரடி

ஈரோடு, ஜன.12-

ஈரோடு கிழக்கு தொகுதியில் நேற்று வரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ. 3.30 லட்சத்தை கண்காணிப்பு குழுவினர் பறிமுதல் செய்தனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலை ஒட்டி அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு குழு அமைக் கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடு பட்டு வருகின்றனர். ஈரோடு கருங் கல்பாளையம் சோதனை சாவடியில் தேர்தல் பறக்கும் படை, கண் காணிப்பு குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின் றனர்.

இந்த நிலையில் கருங்கல் பாளையம் சோதனை சாவடியில் வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் ரூ.1 லட்சம் பணம் இருந்தது. சங்ககிரி அரசு ஒப்பந்ததாரர் சரவணன் என்பவர் அந்த பணத்தை பொள்ளாச்சிக்கு எடுத்து சென்றது தெரியவந்தது. ஆனாலும் அந்த பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் பறக்கும் படையினர் ரூ.1 லட் சத்தை பறிமுதல் செய்து ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் ஒப் படைத்தனர். இதைத்தொடர்ந்து ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஈரோடு அரசு ஆஸ்பத்திரி ரவுண் டானா பகுதியில் தேர்தல் கண் காணிப்பு குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண் டிருந்தனர். அப்போது அந்த வழி யாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர். அப்போது காரில் ரூ.1.80 லட்சம் பணம் இருந்தது தெரிய வந்தது.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி மரப்பாலம் பகுதியில் போலீசார் வாகன சோதனை நடத்தினர்.

இதைத்தொடர்ந்து காரில் வந்த வரிடம் விசாரணை நடத்தியதில் அவர் நாமக்கல் மாவட்டம் திருச் செங்கோடு பகுதியைச் சேர்ந்த லேத் பட்டறை உரிமையாளர் மதன் (55) என்பதும், ஈரோட்டில் நிலம் வாங்குவது தொடர்பாக பணம் கொண்டு வந்ததும் தெரிய வந்தது. எனினும் அவர் கொண்டு வந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் ரூ.1.80 லட்சம் பணத்தை பறிமுதல் செய்து ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறை அலுவலர்களிடம் ஒப்படைத்தனர்.

இதேபோல் ஈரோடு மரப் பாளையம் பகுதியில் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நேற்று முன்தினம் இரவு வாகன சோதனையில் ஈடு பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக ஒரு பெண் டூவீலரில் வந்தார். அவரை நிறுத்தி சோதனை செய்தபோது அந்தப் பெண் ணிடம் 50 ஆயிரத்து 860 ரூபாய் இருந்தது தெரிய வந்தது. விசாரணையில் அந்தப் பெண் ஈரோடு கள்ளுக்கடை பகுதியைச் சேர்ந்த நிர்மலா என தெரிய வந்தது. ஆனால் பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் அந்தப் பணத்தை கைப்பற்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவினர் ஈரோடு மாநகராட்சி கட்டுப் பாட்டு அறையிலுள்ள அலுவலர் களிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் அந்த பணம் தேர்தல் நடத்தும் அதிகாரியும் மாநகராட்சி கமிஷனருமான மனிஷ் உத் தரவின் பேரில் அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது. ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.3.30 லட்சம் பறிமுதல் செய்யப்பட் டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Rs.3.30 Lakhs have been seized so far by the flying squad in the Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினமலர்
12 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் திமுக வேட்பாளராக சந்திரகுமார் அறிவிப்பு

ஈரோடு, ஜன.12-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க சார்பில் மாநில கொள்கை பரப்பு இணைச் செயலாளராக உள்ள வி.சி.சந்திரகுமார் (57) வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.



சந்திரகுமார்

ஈரோடு கிழக்கு தொகுதி திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள சந்திரகுமார் கிராமடையில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். இவரது தந்தை சொக்கலிங்க முதலியார். தாயார் சம்பூர்ணம். சந்திரகுமார் மனைவி அமுதா. இவர்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

ஜவுளி மொத்த வியாபாரம் செய்து வருகிறார். 1987ம் ஆண்டு ஈரோடு அ.தி.மு.க வார்டு பிரதிநிதியாக இருந்தார். பின்னர் நடிகர் விஜயகாந்த் மீது கொண்ட பற்றால் விஜயகாந்த் ரசிகர் மன்ற தலைவராக செயல்பட்டார். பின்னர் நடிகர் விஜயகாந்த் 2005ம் ஆண்டு தே.மு.தி.கவை தொடங்கினார். அப்போது சந்திரகுமார் தே.மு.தி.க.வில் இணைந்து அக்கட்சியின் கொள்கை பரப்பு செயலாளராக பணியாற்றினார்.

2008ம் ஆண்டு ஈரோடு தொகுதி மறுசீரமைக்கப்பட்டு ஈரோடு கிழக்கு, ஈரோடு மேற்கு என பிரிக்கப்பட்டது. ஈரோடு கிழக்கு தொகுதியில் முதலியார் பிரிவினருக்கு கணிசமான ஓட்டு வங்கி உள்ளது. இதன் காரணமாக 2011ம் ஆண்டு ஈரோடு கிழக்கு தொகுதியில் நடந்த தேர்தலில் அ.தி.மு.க கூட்டணியில் தே.மு.தி.க. சார்பில் சந்திரகுமார் போட்டியிட்டார்.

அப்போது அந்த தேர்தலில் சந்திரகுமாரை எதிர்த்து தி.மு.க சார்பில் தற்போதைய அமைச்சர் முத்துசாமி போட்டியிட்டார். இந்த தேர்தலில் சந்திரகுமார் 69 ஆயிரத்து 166 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட முத்துசாமி 58 ஆயிரத்து 522 வாக்குகள் பெற்றார். இந்த தேர்தலில் சந்திரகுமார் 10 ஆயிரத்து 644 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஈரோடு கிழக்கு தொகுதியின் முதல் எம்.எல்.ஏ.வாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் காட்சி மாறியது.

2016ம் ஆண்டு சந்திரகுமார் தே.மு.தி.க கட்சி தலைமையிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக தே.மு.தி.க.வை விட்டு பிரிந்து தி.மு.க.வில் இணைந்தார். அவருக்கு தி.மு.க.வில் மாநில கொள்கை பரப்பு அணி இணை செயலாளர் பொறுப்பு வழங்கப்பட்டது.

2016ம் ஆண்டு நடந்த ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தலில் தி.மு.க சார்பில் சந்திரகுமார் போட்டியிட்டார். அவரை எதிர்த்து அ.தி.மு.க சார்பில் தென்னரசு போட்டியிட்டார். இந்த தேர்தலில் சந்திரகுமார் 57 ஆயிரத்து 85 வாக்குகள் பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட தென்னரசு 64 ஆயிரத்து 879 வாக்குகள் பெற்று 7, 794 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.பின்னர் சந்திரகுமார் தி.மு.க.வில் தீவிரப் பணியாற்றினார்.

2019ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் சேலம் தொகுதி பொறுப்பாளராக பணியாற்றினார். 2021 சட்டமன்ற தேர்தலில் குமாரபாளையம் தொகுதி பொறுப்பாளராக பணியாற்றினார். 2023ம் ஆண்டு பாராளுமன்ற தேர்தலில் திருச்செங்கோடு சட்டமன்ற தொகுதி பொறுப்பாளராக பணியாற்றினார்.

அரவக்குறிச்சி, விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் முழு நேர தேர்தல் பணியாற்றினார். தற்போது ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.க சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

### முதல்வருக்கு நன்றி

இதுகுறித்து சந்திரகும்ார் கூறும் போது, ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட வாய்ப்பு அளித்த முதல் - அமைச்சர் ஸ்டாலினுக்கும், துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த பிறகு செய்யப்பட்டுள்ள மக்கள் நலத்திட்டங்கள்.

குறிப்பாக மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், காலை உணவு திட்டம் போன்ற பல்வேறு மக்கள் நலத்திட்டங்கள் தான் இந்த தேர்தலுடைய கதாநாயகனாக இருக்கப் போகிறது. மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் திமுக வெற்றி பெறும். அதேபோல் முதலமைச்சர் ஸ்டாலின் தேர்தல் யூகங்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினின் தேர்தல் பரப்புரையும் தான் இந்த தேர்தலில் எனக்கு மாபெரும் வெற்றிக்கு உறுதுணையா இருக்க போகிறது என்றார்.

DMK announces Chandrakumar as the candidate for the Erode East Assembly Constituency By-election.

Scanned with OKEN Scanner

தினமலர் 12 JAN 2025



ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி நடந்த மாதிரி ஓட்டுப்பதிவை கலெக்டர் ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டார்.

# ஈரோடு கிழக்குத் தொகுதி மாதிரி வாக்குப்பதிவு: கலெக்டர் ஆய்வு

ஈரோடு, ஜன.12-

ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் வரும் பிப்.5ம் தேதி நடைபெறுவதையொட்டி பல்வேறு முன்னேற்பாடு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி நேற்று ஈரோட்டில் உள்ள எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷின் சேமிப்பு கிடங்கில் ஈரோடு தேர்தல் அலுவலரும், கலெக்டருமான ராஜகோபால் சுன்கரா ஓட்டுப்பதிவு மிஷின்களை சரி பார்க்கும் பணி முடிவடைந்து மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலுக்கான ஓட்டுப்பதிவு 237 வாக்குச்சாவடி மையங்களில் பிப். 5ம் தேதி(புதன்) நடைபெறுகிறது. ஓட்டுப்பதிவிற்கு 480 எலக்ட்ரானிக் மிஷின்கள் பயன்படுத்தப்பட உள்ளது. இதையடுத்து மிஷின்கள் முதல் நிலை சரி பார்க்கும் பணி பெங்களூர் பெல் நிறுவனத்தின் மூலம் கடந்த 6ம் தேதி முதல் நடைபெற்று வருகிறது. இதில் எலக்ட்ரானிக் ஓட்டுப்பதிவு மிஷின்கள் முதற்கட்ட சரிபார்க்கும் பணி முடிவுற்ற பின் இந்திய தேர்தல் கமிஷன் 5 சதவீதம் மாதிரி வாக்குப்பதிவு நடத்திட உத்தரவிட்டுள்ளது.

அதன்படி நேற்று இப்பணி முடிவடைந்ததை தொடர்ந்து நடைபெற்ற மாதிரி வாக்குப்பதிவினை கலெக்டர் ராஜகோபால் சுன்கரா பார்வையிட்டார். மேலும் ஓட்டுப்பதிவு முடிந்தவுடன் 19 மிஷின்கள் பயிற்சி நடத்துவதற்காக ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாநகராட்சி கமிஷனர் மனிஷிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆய்வின் போது ஈரோடு ஆர்டிஓ ரவி, மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) முஹம்மது குதுரத்துல்லா, தாசில்தார் சிவசங்கர் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

Erode Collector / The Election Officer inspects the mock poll in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினகரன் 12 JAN 2025

# மாநகராட்சி அலுவலகத்தில் தீவிர சோதனை


ஈரோடு, ஜன.12: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலையொட்டி தீவிர சோதனைக்கு பிறகே, மாநகராட்சி அலுவலகத்தில் உள்ளே அனுமதிக்கப்படுகின்றனர்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிப்ரவரி 5ம் தேதி நடக்கிறது. தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷ் நியமிக்கப்பட்டிருக்கிறார். தேர்தல் பிரிவு அதிகாரிகளாக, மாநகராட்சி அதிகாரிகள் செயல்பட்டு வருகின்றனர்.

இத்தேர்தலையொட்டி, தேர்தல் கட்டுப்பாட்டு அறை, தபால் வாக்கு அறை உள்ளிட்ட அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளது. தேர்தலையொட்டி, பல்வேறு அரசியல் கட்சியினர், பொதுமக்கள் என பலரும் வந்த வண்ணம் உள்ளனர்.

இதனையடுத்து, மாநகராட்சி அலுவலகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தீவிர சோதனைக்கு பிறகே, அலுவலகத்திற்குள் அனுமதிக்கப்படுகின்றனர்.



▶ ஈரோடு மாநகராட்சி வாசலில் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்டுள்ள தடுப்புகளை தாண்டி பலத்த சோதனைக்கு பின்னரே காவல் துறையினர் அனுமதிக்கின்றனர்.

Acute inspection in the Corporation Office.

Scanned with OKEN Scanner

தினகரன் 12 JAN 2025

### தேர்தல் செலவு தொகுதியில் இருந்து விலக்கு பெற

# நட்சத்திர வேட்பாளர் பட்டியலை 17ம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்

## தமிழக தலைமை தேர்தல் அதிகாரி தகவல்

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை:

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்யும்போது, விமானம் உள்ளிட்ட போக்குவரத்து செலவுகள் கட்சியின் வேட்பாளர் மற்றும் முகவர்கள் கணக்கில் சேராது.

இந்த சலுகையை பெற, அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் 40 பேரின் பெயர் பட்டியலையும், பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்சிகள் 20 பேரின் பெயர் பட்டியலையும் தலைமை தேர்தல் அதிகாரி, தமிழ்நாடு மற்றும் இந்திய தேர்தல் ஆணையத்துக்கு அனுப்ப வேண்டும். தேர்தல் செலவினத்தில் இருந்து விலக்கு பெறவேண்டிய இந்த தலைவர்கள் பட்டியலை, தேர்தல் அறிவிக்கை வெளியிட்டதில் இருந்து 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.



ஈரோடு (கிழக்கு) சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் அறிவிக்கை 10.01.2025 அன்று வெளியிடப்பட்டுள்ளது. செலவுத் தொகையில் இருந்து விலக்கு பெற விரும்பும் கட்சிகள் தங்கள் கட்சியின் சார்பில் பிரசாரம் செய்யும் தலைவர்களின் பெயர் பட்டியலை தெரிவித்து இந்திய தேர்தல் ஆணையம் / தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரிக்கு வருகிற 17ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த பட்டியலில் உள்ளவர்களின் பயணச் செலவுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்படும். இதுதவிர மற்ற செலவினங்கள் அனைத்தும் வேட்பாளரின் செலவு கணக்கில் சேர்க்கப்படும். அதே நேரம், வேட்பாளருக்கு வேறு கட்சியின் நட்சத்திர தலைவர் பிரசாரம் செய்தால், அதில் விலக்கு கோர முடியாது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

List of star candidates should be sent by 17th January, to get exemption from the election expenditure - The Chief Election Commissioner informs.

Scanned with OKEN Scanner

தினகரன் 12 JAN 2025

### வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள்

# 12 வகையான ஆவணங்களை சமர்ப்பித்து வாக்களிக்கலாம்

## தேர்தல் ஆணையம் அறிவிப்பு

ஈரோடு, ஜன. 12: வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் 12 வகையான ஆவணங்களை சமர்ப்பித்து வாக்களிக்கலாம் என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தல் அடுத்த மாதம் 5ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் தொடங்கி நடைபெற்று வருகின்றது. இந்நிலையில், நடைபெற உள்ள இத்தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக, பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை காண்பிக்க வேண்டும் என இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, ஆதார் அட்டை, மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டத்தின் பணி அட்டை, வங்கி, அஞ்சலக கணக்குப்புத்தகங்கள் (புகைப்படத்துடன் கூடியது) தொழிலாளர் நல அமைச்சக திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு ஸ்மார்ட் அட்டை, ஓட்டுநர் உரிமம், நிரந்தர கணக்குஎண் அட்டை, தேசியமக்கள் தொகை பதிவேட்டின் கீழ் இந்திய தலைமை பதிவாளரால் வழங்கப்பட்ட ஸ்மார்ட் அட்டை, இந்தியகடவுச்சீட்டு, புகைப்படத்துடன்கூடிய ஓய்வூதிய ஆவணம், ஒன்றிய, மாநில அரசு, பொதுத்துறை நிறுவனங்களால் வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களால் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள், பாராளுமன்ற, சட்டமன்ற, சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அலுவலக அடையாள அட்டை, ஒன்றிய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்படும் தனித்துவமான இயலாமைக்கான அடையாள அட்டை உள்ளிட்ட 12 வகையான ஆவணங்களை சமர்ப்பித்து வாக்களிக்கலாம்.

வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையால் வாக்காளரின் அடையாளம் மெய்ப்பிக்கப்படுகின்ற போது, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையிலுள்ள அச்சுப்பிழைகள், எழுத்துப்பிழைகள் முதலியவற்றை பொருட்படுத்த தேவையில்லை. ஒரு வாக்காளர் வேறொரு சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட அடையாள அட்டையை வைத்திருப்பாரேயானால் அந்த அடையாள அட்டையையும் இந்திய தேர்தல் ஆணையம் காட்டும் ஆவணமாக பயன்படுத்தலாம்.

ஆனால், அந்த வாக்காளருடைய பெயர் அந்த வாக்குச்சாவடிக்குரிய வாக்காளர் பட்டியல் இடம் பெற்றிருக்க வேண்டும். வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை அல்லது இந்திய தேர்தல் ஆணையத்தால் வரையறுக்கப்பட்ட மேற்கூறிய எந்த ஒரு அடையாள ஆவணம் வைத்திருப்பதால் மட்டுமே ஒரு வாக்காளர் தனது வாக்கை செலுத்தி விடமுடியாது.

அவருடைய பெயர் வாக்குச்சாவடிக்கு அனுப்பப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தால் மட்டுமே அவர் வாக்குரிமையை செலுத்த தகுதியுடையவர் ஆவர்.

வாக்காளர் தகவல் சீட்டு வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக அச்சிடப்பட்டு வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட போதிலும், வாக்காளர் தகவல் சீட்டு அடையாள ஆவணமாக அனுமதிக்கப்படாது. வெளிநாடுவாழ் இந்தியர்கள் தங்களது அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக அசல் இந்திய கடவுச்சீட்டினை மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Election Commission announces :
Those do not have voter ID card can submit any of the 12 kinds of documents for casting votes.

Scanned with OKEN Scanner

தினகரன் 12 JAN 2025

### தேர்தல் பணியில் ஈடுபட உள்ள

# மண்டல அலுவலர்களுக்கு 2ம் கட்ட பயிற்சி கூட்டம்

ஈரோடு, ஜன.12: ஈரோடு மாநகராட்சி அலுவலக கூட்ட அரங்கில், தேர்தல் பணியில் ஈடுபட உள்ள மண்டல அலுவலர்களுக்கு 2ம் கட்ட பயிற்சிக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை யொட்டி, மண்டல அலுவர்கள் மற்றும் மண்டல துணை அலுவலர்களுக்கான 2ம் கட்ட பயிற்சி கூட்டம், மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு, தேர்தல் நடத்தும் அலுவலரும், மாநகராட்சி ஆணையருமான மனிஷ் தலைமை வகித்தார்.

இதில், வாக்குச்சாவடிகளை தணிக்கை செய்ய வேண்டும். பதற்றமான வாக்குச்சாவடிகள் குறித்த அறிக்கையை உரிய படிவங்களில் சமர்பிக்க வேண்டும்.

தேர்தல் தொடர்பான விபரங்களை சேகரித்து, அறிந்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. மேலும், வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு எவ்வாறு பயிற்சி வழங்குவது குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.




▶ ஈரோடு மாநகராட்சி கூட்டரங்கில் மண்டல அலுவலர்களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி கமிஷனர் மனிஷ் தலைமையில் நடந்தது.

2nd Phase Training for the By-election Zonal Officers.

Scanned with OKEN Scanner

தினகரன் 12 JAN 2025



▶ ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலையொட்டி கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள குடோனில் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா ஆய்வு மேற்கொண்டார்.

Erode Collector / The Election Officer inspects the room where the electronic voting machines kept.

Scanned with OKEN Scanner

தமிழ் சுடர் 12 JAN 2025



நடைபெறவுள்ள ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்பு கிடங்கில், மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் ராஜகோபால் சுன்கரா மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சரிபார்ப்பு பணி முடிந்து, மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்று வருவதை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில், பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

Erode Collector / The Election Officer inspects the mock poll in Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

தினமணி 12 JAN 2025

# ஈரோடு கிழக்கு: திமுக வேட்பாளர் அறிவிப்பு

சென்னை/ஈரோடு, ஜன. 11: ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் திமுக சார்பில் வி.சி.சந்திரகுமார் (57) போட்டியிட உள்ளார். இதற்கான அறிவிப்பை கட்சியின் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை வெளியிட்டார்.

இதுகுறித்து அவரது அறிவிப்பு விவரம்: ஈரோடு கிழக்கு சட்டப் பேரவைத் தொகுதி இடைத்தேர்தல் குறித்து காங்கிரஸ் கட்சியுடன் கலந்து பேசப்பட்டது. இடைத் தேர்தலில் திமுக போட்டியிட முடிவு எடுக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் திமுக வேட்பாளராக கட்சியின் கொள்கை பரப்பு இணைச் செயலர் வி.சி.சந்திரகுமார் போட்டியிடுவார் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை சனிக்கிழமை சந்தித்து வாழ்த்து பெற்ற ஈரோடு கிழக்கு தொகுதி திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார். உடன் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, க.பொன்முடி, சு.முத்துசாமி, விவசாய அணி இணைச் செயலாளர் குறிஞ்சி என்.சிவகுமார், ஈரோடு தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார்.

**வாழ்த்து:** இடைத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் வி.சி. சந்திரகுமார், முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது முகாம் அலுவலகத்தில் சனிக்கிழமை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அப்போது, அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, க.பொன்முடி, சு.முத்துசாமி மற்றும் ஈரோடு மாவட்ட திமுக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

**பிப். 5-இல் வாக்குப் பதிவு:** கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணியில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் கட்சிக்கு ஈரோடு கிழக்கு தொகுதி ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் போட்டியிட்ட தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனின் மகன் திருமகன் ஈவெரா 67,300 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

கடந்த 2023 ஜனவரி 4-ஆம் தேதி உடல்நலக் குறைவால் அவர் உயிரிழந்தார். இதையடுத்து ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதில், திமுக தலைமையிலான கூட்டணியில் மீண்டும் காங்கிரஸ் கட்சி போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டது.

அதன்படி, 2023 பிப். 27-ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் போட்டியிட்டு 1 லட்சத்து 10 ஆயிரத்து 156 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

இந்நிலையில், ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் கடந்த டிச. 14-ஆம் தேதி உடல்நலக் குறைவால் உயிரிழந்ததையடுத்து, ஈரோடு கிழக்கு தொகுதிக்கு மீண்டும் இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டது. வேட்புமனு தாக்கல் கடந்த 10-ஆம் தேதி தொடங்கியது. 17-ஆம் தேதி வேட்புமனு தாக்கலுக்கான இறுதி நாளாகும். 20-ஆம் தேதி வேட்பாளர் பட்டியல் இறுதி செய்யப்பட்டு, பிப். 5-ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

**யார் இந்த சந்திரகுமார்?:** திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள வி.சி.சந்திரகுமாருக்கு சொந்த ஊர் ஈரோடு. ஜவுளி வியாபாரம் செய்து வந்தார். 1987-இல் திமுக வார்டு பிரதிநிதியாக தனது அரசியல் பயணத்தைத் தொடங்கினார்.

நடிகர் விஜயகாந்தின் தீவிர ரசிகராக இருந்த வி.சி.சந்திரகுமார், விஜயகாந்த் ரசிகர் மன்றத்தின் ஈரோடு மாவட்ட தலைவராக பொறுப்பு வகித்து வந்தார். தொடர்ந்து விஜயகாந்த் தேமுதிகவை உருவாக்கியபோது அக்கட்சியின் கொள்கை பரப்புச் செயலராக பொறுப்பு வகித்தார்.

2011-ஆம் ஆண்டு ஈரோடு கிழக்கு தொகுதி உருவாக்கப்பட்டபோது தேமுதிக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 2016-ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலில் திமுக ஆதரவுடன் ஈரோடு கிழக்கு தொகுதியில் மீண்டும் போட்டியிட்டு அதிமுக வேட்பாளர் கே.எஸ்.தென்னரசிடம் தோல்வியுற்றார்.

அதன்பின், தேமுதிகவில் இருந்து விலகி மக்கள் தேமுதிக எனும் கட்சியை உருவாக்கினார். கடந்த 2016-ஆம் ஆண்டு திமுகவில் இணைந்து, மாநில கொள்கை பரப்பு இணைச் செயலராக பொறுப்பு வகித்து வருகிறார்.

எம்.ஏ.(பொது நிர்வாகம்) பயின்றுள்ள வி.சி.சந்திரகுமார், முதலியார் இனத்தைச் சேர்ந்தவர். இவரின் மனைவி வி.சி.அமுதா. மகள் ருசிதாஸ்ரீ பல் மருத்துவர். மகன் மெகர்வின்ஸ்ரீ சட்டப் படிப்பு பயின்று வருகிறார்.

DMK announces the candidate for the Erode East Assembly Constituency By-election.

Scanned with OKEN Scanner

தின சூரியன் 12 JAN 2025

# ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.3.30 லட்சம் பறிமுதல் பறக்கும் படை கண்காணிப்பு குழுவினர் நடவடிக்கை

ஈரோடு, ஜன.12

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை ஒட்டி அரசியல் கட்சியினர் வாக்காளர்களுக்கு பணம் பரிசுப் பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படை மற்றும் கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் 24 மணி நேரமும் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். ஈரோடு கருங்கல்பாளையம் சோதனை சாவடியில் தேர்தல் பறக்கும் படை, கண்காணிப்பு குழுவினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் கருங்கல்பாளையம் சோதனை சாவடியில் வந்த காரை நிறுத்தி சோதனை செய்தபோது அதில் ரூ.1 லட்சம் பணம் இருந்தது.

சங்ககிரியை அரசு ஒப்பந்ததாரர் சரவணன் என்பவர் அந்த பணத்தை பொள்ளாச்சிக்கு எடுத்து சென்றது தெரியவந்தது. எனினும் அந்த பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் பறக்கும் படையினர் ரூ.1 லட்சத்தை பறிமுதல் செய்து ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் ஒப்படைத்தனர். இதைத் தொடர்ந்து நேற்று ஈரோடு கிழக்கு தொகுதிக்குட்பட்ட ஈரோடு அரசு மருத்துவமனை ரவுண்டான பகுதியில் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் வாகன சோதனையில் ஈடுபட்டு கொண்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை தடுத்து நிறுத்தி சோதனை செய்தனர்.

அப்போது காரில் ரூ.1.80 லட்சம் பணம் இருந்தது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து காரில் வந்தவரிடம் விசாரணை நடத்தியதில் அவர் நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு பகுதியைச் சேர்ந்த லேத் பட்டறை உரிமையாளர் மதன் (55) என்பதும் ஈரோட்டில் நிலம் வாங்குவது தொடர்பாக பணம் கொண்டு வந்ததும் தெரிய வந்தது.

எனினும் அவர் கொண்டு வந்த பணத்துக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் ரூ.1.80 லட்சம் பணத்தை பறிமுதல் செய்து ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறை அலுவலர்களிடம் ஒப்படைத்தனர். இதே ஈரோடு மரப்பாலம் பகுதியில் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் நேற்று இரவு வாகன சோதனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்த வழியாக ஒரு பெண் மோட்டார் சைக்கிளில் வந்தார். அவரை நிறுத்தி சோதனை செய்தபோது அந்தப் பெண்ணிடம் 50 ஆயிரத்து 860 ரூபாய் இருந்தது தெரிய வந்தது. விசாரணையில் அந்தப் பெண் ஈரோடு கல்லுக்கடை பகுதியைச் சேர்ந்த நிர்மலா என தெரிய வந்தது. ஆனால் பணத்திற்குரிய ஆவணங்கள் இல்லாததால் அந்தப் பணத்தை கைப்பற்றிய தேர்தல் கண்காணிப்பு குழுவினர் ஈரோடு மாநகராட்சி கட்டுப்பாட்டு அறையிலுள்ள அலுவலர்களிடம் ஒப்படைத்தனர்.

பின்னர் அந்த பணம் தேர்தல் நடத்தும் அதிகாரியும் மாநகராட்சி ஆணையாளருமான மனீஷ் உத்தரவின் பெயரில் அரசு கருவூலத்தில் ஒப்படைக்கப்பட்டது.

ஈரோடு கிழக்கு தொகுதியில் இதுவரை உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட ரூ.3.30 லட்சம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

Rs.3.30 Lakhs without proper documents have been seized so far by the flying squad in the Erode East Assembly Constituency.

Scanned with OKEN Scanner

வணக்கம் இந்தியா 1 2 JAN 2025



ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் 2025ஐ யொட்டி, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஊடக சான்றளிப்பு மற்றும் ஊடக கண்காணிப்பு மையத்தினை தேர்தல் நடத்தும் அலுவலர் / ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் மரு.மனிஷ். பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) ராமகிருஷ்ணசாமி, துணை ஆட்சியர் (பயிற்சி) சிவபிரகாஷம் உட்பட பலர் உள்ளனர்.

The Returning Officer/Erode Corporation Commissioner inspects the Media Certification and Monitoring Committee.

Scanned with OKEN Scanner

வணக்கம் இந்தியா 1 2 JAN 2025




ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு, 18 வயது பூர்த்தியான வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திடும் வகையில் கருங்கல்பாளையம் அரசு நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி முன்பு நடைபெற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

SVEEP Activity for 100% polling turnout.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 12 JAN 2025

# கட்சியினர் முன்னிலையில் மாதிரி ஓட்டுப்பதிவு

ஈரோடு, ஜன. 12-

கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக, மாவட்ட மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்கள் சேமிப்பு கிடங்கில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் கலெக்டர் ராஜகோபால் சுன்கரா முன்னிலையில் ஆய்வும், மாதிரி ஓட்டுப்பதிவும் நேற்று நடந்தது.

கடந்த தேர்தலில், 237 ஓட்டுச்சாவடிகளில், 480 மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரம், 480 கட்டுப்பாட்டு இயந்திரங்கள், 480 விவிபேட் இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. இவை பெல் இன்ஜினியர்களால் சரிபார்க்கும் பணி நடந்தது. அனைத்து இயந்திரங்களும் முழு செயல்பாட்டில் உள்ளதை உறுதி செய்தனர். இதில் இருந்து 5 சதவீத இயந்திரங்களை எடுத்து, முதற்கட்ட மாதிரி ஓட்டுப்பதிவு நேற்று நடத்தினர். இதில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் பங்கேற்றனர். மாதிரி ஓட்டுப்பதிவு செய்து, எண்ணிக்கையை சரிபார்த்து, இயந்திர செயல்பாட்டை உறுதி செய்தனர். பின், 19 இயந்திரங்கள், பயிற்சி நடத்துவதற்காக தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷிடம் ஒப்படைக்கப்பட்டது.

Mock poll conducted in the presence of political party members.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 12 JAN 2025

# மண்டல அலுவலர்களுக்கு தேர்தல் பயிற்சி வழங்கல்

**ஈரோடு, ஜன. 12–**

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பணி செய்யும் மண்டல அலுவலர்கள், உதவி மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி கூட்டம் நடந்தது. தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷ் தலைமை வகித்தார். தேர்தல் பிரிவு அதிகாரிகள் பயிற்சி வழங்கினர். தொகுதியில், 53 இடங்களில், 237 ஓட்டுச்சாவடிகளில் தலா 5 அல்லது 6 முதல், எட்டு ஓட்டுச்சாவடிக்கு ஒரு மண்டல அலுவலர், ஒரு உதவி மண்டல அலுவலர் நியமிக்கப்படுவர்.

ஓட்டுச்சாவடிக்கு தேவையான பயன்பாட்டு பொருட்கள், பணி செய்யும் தேர்தல் அலுவலர் எண்ணிக்கையை உறுதி செய்து, தேவை அடிப்படையில் கூடுதல் நபர் நியமனம், விடுப்பு, உடல் நலக்குறைவால் மாற்றம் செய்ய வேண்டியவரை விடுவித்து, மற்றொரு நபரை பணி செய்ய அனுமதித்தல் போன்ற பணியும் இவர்கள் செய்ய வேண்டும்.

ஓட்டுப்பதிவு நாளில் இயந்திரங்களை ஓட்டுச்சாவடிக்கு கொண்டு சென்று, பழுது, பிற பிரச்னைகள் ஏற்பட்டால் பழுது நீக்கம், மாற்றி அமைத்தல் பணியும், ஓட்டுப்பதிவு முடிந்ததும், ஓட்டு எண்ணும் மையத்துக்கு கொண்டு சேர்ப்பது வரை, இவர்களது பொறுப்பாகும். இதுபற்றிய முழு விபரங்கள் அடங்கிய தொகுப்பு வழங்கி, பயிற்சி வழங்கப்பட்டது.

Training class for the Zonal Officers.

Scanned with OKEN Scanner

காலைக்கதிர் 12 JAN 2025

## 100 சத ஓட்டுப்பதிவுக்கு விழிப்புணர்வு இயக்கம்

ஈரோடு, ஜன. 12-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில், 100 சதவீத ஓட்டுப்பதிவை வலியுறுத்தி, மாநக ராட்சி தலைமை அலுவலக வாயில் பகுதியில், விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம் நேற்று நடந் தது. தேர்தல் நடத்தும் அலுவலர் மணீஷ் முதல் கையெழுத்திட்டு இயக்கத்தை துவக்கி வைத்தார். துணை ஆணையர் தனலட்சுமி, செயற்பொறி யாளர் விஜயகுமார் உட்பட மாநகராட்சி அதிகா ரிகள், தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் கையெழுத்திட்டனர். மக்கள், இளைஞர்களும் ஆர்வத்துடன் கையெழுத்தை பதிவு செய்தும், செல்பி எடுத்தும் சென்றனர்.

SVEEP Activity for 100% polling turnout.

Scanned with OKEN Scanner